# சிந்தையின் போர்

3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# அமெரிக்கரில் பத்தில் ஒன்பது பேர் மனநல பாதிப்பினால் அவதியுறுகின்றனர் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 48 - அப்பொழுது இயேசு வந்து அழைத்தார் - ஜெபர்சன்வில், இண்டியானா, 57 -0407

அது என்ன? அது மனதளவில் நரம்புக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்கள்.

அமெரிக்கரில் பத்தில் ஒன்பது பேர் மனநல பாதிப்பினால் அவதியுறுகின்றனர் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மனதளவில் பாதிக்கப்பட்டவர்களின் காரியங்களை ஆராய்ந்து வெளிக் கொண்டு வருகிறவர்களாக இருக்க வேண் டிய மனநல மருத்துவர்களும் கூட மிகவும் கோபதாபத்துக்குள்ளாகவும் மனநோய் உடையவர்களாகவும் ஆகிவிட்டனர்.

அவர்கள் மனநல காப்பகத்தில் பெரிய விலங்கிட்டு கட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளனர்.

பைத்திய நிலையானது தொடர்ந்து முன் சென்று கொண்டிருக்கின்றது.



# இந்த டீன் ஏஜ், வாலிபப் பருவத்தின் பைத்தியத்தனத்தைப் பாருங்கள் !



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 190 - தேவனால் அருளப்பட்ட ஆராதனை ஸ்தலம், 65 - 0425E

இந்த டீன் ஏஜ், வாலிபப் பருவத்தின் பைத்தியத்தனத்தைப் பாருங்கள்! நாம் ஒரு... முன்பொரு நாள் நான் உங்களிட மாக கூறினது போல, நான் வசிக்கும் அரிசோனாவில் உள்ள பள்ளிகளில் அவர் கள் ஒரு ஆய்வு நடத்தினர், பள்ளியில் உள்ள எண்பது சதவிகித பிள்ளைகள் மனவளர்ச்சி குன்றியவர்களாக உள்ளனர் என்று கண்டறிந்தனர். அவர்களுடைய பிள்ளைகள் எப்படி இருப்பார்கள்? நம் மால் இன்னும் ஒரு தலைமுறையை கொண்டிருக்க முடியாது. நாம் முடிவில் இருக்கின்றோம். இந்த காரியங்கள் வரும் என்று இயேசு கூறினார்.

# பாருங்கள், உலகமானது முற்றிலுமாக முழுவதுமாக மனநலம் குன்றியதாக ஆகிவிடும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 191 - தேவனால் அருளப்பட்ட ஆராதனை ஸ்தலம். LA, CA, 65 - 0425E

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் எல்லாமும் இந்த கற்பனைக்குரிய காரியங் களை ஒலிபரப்புவதைப் பாருங்கள்.

ஆனால் ஒரு சமயம் வரும் அப் பொழுது மக்கள் முழுவதுமாக மன நலம் பாதித்தவர்களாக ஆகிவிடுவார்கள், முழு வதுமாக மனநலம் பாதித்தவர்களாக இருப் பார்கள்.

உலகமும் அப்படியாக இருக்கும் என்று தான் முன்னறிவிக்கிறேன்.

இன்று சினிமா படக்காட்சிகளில் காண்பிக்கப்படும் சரித்திரக் காலத்திற்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த மிருகங்கள் ஆயிரமாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மிருகங்கள், முட்டையிலிருந்து பொறித்து வெளி வந்து ஒரு பயங்கர தோற்றம் கொண்ட போன்ற பயங்கரமான தோற்றங்களைக் குறித்து வேதாகமம் கூறுகின்றது.

ஆனால் நடக்க இருக்கும் காரியங்களோடு ஒப்பிடுகையில் அது ஒரு சிறு காரியம் தான்.

பாதாளம் திறக்கப்படுகையில் பிசாசு தான் கொண்டிருக்கின்ற எல்லா பயங்கர மர்மமான காரியங்களுடன் வெளியே வருகிறான், அது ஒரு ஸ்திரீ... பெண்களைப் போல முடியையும் சிங்கத்தைப் போல பற்களையும் கொண்டுள்ள ஒரு வெட்டுக் கிளிகளைப் போல...

பாருங்கள், உலகமானது முற்றிலுமாக முழுவதுமாக மனநலம் குன்றியதாக ஆகிவிடும்.

அப்பொழுது அது எப்படி இருக்குமென்றால் இப்பொழுது உள்ளதைக் காட்டிலும் ஒருபடி அதிகமாக இருக்கும்.

# ஆனாலும் ஜனங்கள் அதை இன்னும் அறியாமலிருக்கின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 77 - இதை அறியாமல் இருக்கிறாயா, ஜெபர்சன்வில், இண்டியானா, 65-0815

எனவே அது முழு உலகத்தையும் பைத்தியத்தில், மனநலம் பாதித்த நிலைக் குள்ளாக ஆழ்த்துகின்றது.

காரியம் முழுவதுமே பைத்தியமா யுள்ளது.

அது படிப்படியாக உள்ளே நுழைந்து விட்டது.

ஆனாலும் ஜனங்கள் அதை இன்னும் அறியாமலிருக்கின்றனர்.

இப்பொழுது, ஆவியானவர் இதை
ஆமோதிப்பதை பாருங்கள், கர்த்தரின்
நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது.
அப்பொழுது ஜனங்கள் முழுவதும்
பைத்தியம் பிடித்தவர்களாக, மனநலம்
பாதித்தவர்களாக ஆகிவிடுவார்கள்.
வேதம் அவ்வாறு கூறுகின்றது



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

## செய்தி: 165 - இதை அறியாமல் இருக்கிறாயா, ஜெபர்சன்வில், இண்டியானா, 65-0815

இப்பொழுது, ஆவியானவர் இதை ஆமோதிப்பதை பாருங்கள், கர்த்தரின் நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது. அப்பொழுது ஜனங்கள் முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களாக, மனநலம் பாதித்தவர்களாக ஆகிவிடுவார்கள். வேதம் அவ்வாறு கூறுகின்றது.

அவர்கள் பயத்தில் கூக்குரலிட்டு அலறுவார்கள் தங்கள் மனதில் பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய் வார்கள் ... வானொலிகளும் தொலைக் காட்சிகளும் அத்தகைய பயங்கரமான

காட்சிகள் கொண்ட நிகழ்ச்சிகளை தயாரித்து காண்பிக்கின்றன.



# அப்பொழுது அவன் எறும்புகளை மலை அளவுக்கு பெரிதாகக் காண்பதாக கற்பனை செய்து கொள்வான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 22 - கிறிஸ்து தம் சொந்த வார்த்தையின் வெளிப்படுகின்றார் - ஜெபர்சன்வில், இண்டியானா, 65-0822M

சற்று கழித்து மனிதன் பைத்திய நிலையை அடைவான்.

அப்பொழுது அவன் எறும்புகளை மலை அளவுக்கு பெரிதாகக் காண்பதாக கற்பனை செய்து கொள்வான்.

வேதனைப்படுத்துகின்ற ஸ்திரீகள் இருப்பார்கள், நீண்ட கூந்தலைக் கொண்ட வெட்டுக்கிளிகள் பூமியில் தோன்றி கூந்த

லைக் கத்தரித்துள்ள ஸ்திரீகளை துன்பப் படுத்தும்.

அவைகளுக்கு ஸ்திரீகளைப் போல் நீண்ட கூந்தல் தொங்கிக் கொண்டிருக்கும்; அவைகளுக்கு சிங்கத்தைப் போல் நீள மான பற்களும் தேளின் வாலில் உள்ள கொடுக்கைப் போல கொடுக்கும் அவை களுக்கு இருக்கும், பூமியின் மேல் இருக் கும் மனிதரை துன்பப்படுத்தி வேதனைக் குள்ளாக அது ஆக்கும்.

# உலகம் மனநலம் குன்றி பைத்தியமாகி விட்டது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 323 - விசுவாசத்தை வெளிப்படுத்து கிரியைகள் - ஷ்ரீவ்போர்ட், LA, 65 - 1126

உலகம் மனநலம் குன்றி பைத்தியமாகி விட்டது.

கொலைகள் சிறு பெண் பிள்ளைகள் துண்டு துண்டாக வெட்டப்படுகின்றனர் மற்றும் மானபங்கம்படுத்தப்படுகிறார்கள்.

ஜனங்கள், ஆண்கள் தங்கள் தலை மயிரை பெண்கள் போலவும், பெண்கள் ஆண்களைப் போலவும் வைத்துக்கொள் கின்றனர்; அவர்கள் காரியங்களை தாறு மாறாக்குகின்றனர்.

மானிட வர்க்கம் மரித்துக் கொண் டிருக்கின்றது.

உலகம் மரித்துக் கொண்டிருக்கின்றது.

எல்லா காரியங்களும் மரித்துக் கொண்டிருக்கின்றன.

சபையும் மரித்துக் கொண்டிருக்கின்றன.



பைத்தியக்காரத்தனத்தின் மத்தியில்
தங்கியிருக்க எனக்கு விருப்பமில்லை,
பயங்கரமான காட்சிகள் தோன்றும்
போது, இங்கு நின்று கொண்டு
காணப்பட நான் விரும்பவில்லை...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 330 - வழி நடத்தும் தன்மை, கோவினா, கலிபோர்னியா, 65-1207

இயேசுவே என்னை பின்னால் விட்டு விட்டுச் சென்று விடாதேயும், பிதாவே, உம்முடன் நான் வரட்டும்.

வரப்போகும் உபத்திரவங்களைக் காண நான் இவ்வுலகில் தங்கியிருக்க விரும்பவில்லை.

பைத்தியக்காரத்தனத்தின் மத்தியில் தங்கியிருக்க எனக்கு விருப்பமில்லை, பயங்கரமான காட்சிகள் தோன்றும் போது, இங்கு நின்று கொண்டு காணப்பட நான் விரும்பவில்லை...

ஜனங்கள் தங்கள் ஆரோக்கியமான சிந்தையை இழந்து பைத்தியமாகுகின்றனர்.

மனிதன் மிருகங்களைப்போல் நடந்து கொள்ளவும் மிருகங்களைப் போல் காண முயல்வதை நாங்கள் காண்கிறோம்.

ஸ்திரீகள் முகங்களில் வர்ணம் தீட்டிக் கொண்டு, மிருகங்களைப் போல் காணப் பட முயல்கின்றனர்.

இவை யாவும் சம்பவிக்குமென்று முன்னுரைக்கப்பட்டுள்ளது என்று நான் அறிவேன்.

அவர்களுக்கு பைத்தியம் பிடித்து, வெட்டுக்கிளிகள் ஸ்திரீகளைப் போன்ற தலைமயிர் கொண்டு எழும்பி வந்து ஸ்திரீகளை துன்புறுத்தும், அவைகளுக்கு

சிங்கங்களைப் போன்ற பற்கள் இருக்கும். இவைகளை நீர் கூறியுள்ளீர்.

ஜனங்களுடைய பக்தி நிலை முற்றிலுமாக மாறி, அவர்களுக்கு புத்தி மாறாட்டம் ஏற்படும்.

கர்த்தாவே, அது ஏற்கெனவே உருவானதை நாங்கள் காண்கிறோம்.

ஆண்டவரே, எங்களுக்கு உதவி செய்யும்.

எங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் தெளிந்த புத்தியை எங்களுக்கு திரும்ப அளியும்.

# பெரிய பயங்கரமான காரியங்கள் பூமியின் மீது வரும் என்று கூறியுள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 289 - தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தானம், ஷீரீவ்போர்ட், LA, 65-1128M

மக்கள் மனோநிலையையும், பதட்டமான காலத்தையும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தை பார்க்கும் போது, கர்த்தாவே, அது அவர்களை புத்தியை இழக்கச் செய்வதை காண்கிறோம்.

இதைத்தான் வேத வாக்கியங்கள் சரியாக கூறிவாக்குரைத்தது. அது அவ்வாறே நிறைவேறி வருகிறது. பெரிய பயங்கரமான காரியங்கள் பூமியின் மீது வரும் என்று கூறியுள்ளது.



இப்பொழுது, அவர்கள் ஒரு
மனந்திரும்பின நபராக, பரிசுத்த
ஆவியால் நிரப்பப்பட்டவராக, ஆனால்
இன்னுமாக முழுவதுமாக பைத்தியம்
பிடித்தவர்களாக இருப்பர்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 18-பிசாசியல். உடல் சார்ந்த மண்டலம், கானர்ஸ்வில், இண்டியானா, (53-0608)

அநேக சமயங்களில் ஒருக்கால் மன நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்ற ஒரு நபரை உங்களால் காண முடியும்.

இப்பொழுது, அவர்கள் ஒரு மனந் திரும்பின நபராக, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவராக, ஆனால் இன்னுமாக முழுவதுமாக பைத்தியம் பிடித்தவர்களாக இருப்பர். பாருங்கள்?

அது சரி; அதற்கும் ஆத்துமாவிற்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது. அது ஒரு வேதனைக்குட்படுத்துகிறவன் ஆகும்

~ 3 ~

(பாருங்கள்?) அவர்களை வேதனைக்குள்ளாக்குகின்ற ஏதோ ஒன்று



புற்றுநோய் போலவே சிகரெட்டுகள், புகையிலைகள், விஸ்கி மற்றும் எல்லாமும் சிறு பிள்ளைகளின் மனநலம் பாதிப்புக்குள்ளாகி அவர்களை மனநலக் காப்பகத்திற்கு அனுப்புகிறது, மருத்துவமனைகளுக்கு அனுப்புகிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 76 - முழுமையிலும், சந்தோஷத்திலும் மீட்பு, லூயிவில், கெண்டக்கி, 54-0330

புற்றுநோய் போலவே சிகரெட்டுகள், புகையிலைகள், விஸ்கி மற்றும் எல்லாமும் சிறு பிள்ளைகளின் மனநலம் பாதிப்புக் குள்ளாகி அவர்களை மனநலக் காப்பகத் திற்கு அனுப்புகிறது, மருத்துவமனை களுக்கு அனுப்புகிறது.

ஒரு நரம்புதளர்ச்சி கொண்ட கூட்டத் தையே பிறப்பிக்கிறது மற்றும் உலகத்தில் உண்டாக்கப்படுகின்ற எல்லாமே..

அது என்ன செய்கிறது தெரியுமா? அது அவர்களை அவர்கள் தாறுமாறாக பைத்தியமாக நடந்து கொள்வார்கள், பிசாசு அவர்களை பிடித்துக் கொள்கிறான். புரிகின்றதா? பைத்தியத்திற்குள்ளாக்குகிறது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 480 - 53 கேள்விகளும் பதில்களும், ஜெபர்சன்வில், இண்டியானா, COD 59-1223

அவர்கள் ஒரு பள்ளிகூட சிறுமியை எடுத்துக் கொள்வது போல, முதல் காரியம் அவர்கள் அவளை சிகரெட்டு புகைக்கச் செய்வார்கள் பாருங்கள்?


அந்த செயல் எல்லாவற்றையும் செய் யும்படிக்கு ஆரம்பிக்கிறது.

அடுத்ததாக, அவர்கள் செய்கின்ற காரியம் என்னவென்றால், இன்னும் சிறிது அதிகப்படியாக காரியங்கள் ஆகும்.

அதன் பிறகு செய்யப்பட்ட முதல் காரியம் மாரியூனா (marijuana) கஞ்சா போதை பழக்கத்தில் கொண்டு போய் விடும்; அது முதல் கொண்டு மிக அதிகமாக போதை பழக்க அடிமையாக மாறிவிடுவார்கள்.

அது என்ன செய்கிறது தெரியுமா? அது அவர்களை அவர்கள் தாறுமாறாக பைத்தியமாக நடந்து கொள்வார்கள், பிசாசு அவர்களை பிடித்துக் கொள்கிறான். புரிகின்றதா? பைத்தியத்திற்குள்ளாக்குகிறது.

கோபத்தினால் மூர்க்கவெறி
கொண்டிருக்கின்ற ஒரு மனிதனை
நீங்கள் காணும் போது "ஒஹ்ற, ஒ ஒஹ்ற,
கதரேனாவில் என்ன சம்பவித்தது
என்பதை இப்பொழுது என்னால் அறிந்து
கொள்ள முடிகின்றது" என்று கூறலாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 90 - கேள்விகளும் பதில்களும், ஜெபர்சன்வில், இண்டியானா, COD 59-1223

நீங்கள் எப்போதாதாவது கோபம் கொண்ட மூர்க்க வெறியுடன் இருக்கின்ற ஒரு நபரை பார்த்திருக்கிறீர்களா? ஆம், அது என்னவென்றால் - அது அப்படித் தான் இருக்கின்றது. அது பிசாசுகள் ஆகும். அதுதான் அவர்களுக்கு சம்பவித்திருக் கிறது.

கோபத்தினால் மூர்க்கவெறி கொண் டிருக்கின்ற ஒரு மனிதனை நீங்கள் காணும் போது "ஒஹ், ஒ ஒஹ், கதரேனாவில் என்ன சம்பவித்தது என்பதை இப்பொழுது என்

னால் அறிந்து கொள்ள முடிகின்றது" என்று கூறலாம். பாருங்கள்?

அது முற்றிலுமாக மனநோய்க்குள் ளாக்கி பைத்தியமாக்கும்.

அதைத்தான் மேயோ மருத்துவமனை மனநோயின் முதல் நிலை என்று கூறு கின்றது.



# இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் செய்த மிகவும் கீழ்த்தரமான என்னவென்றால் அவர்கள் சிகரெட்டு புகைக்க ஆரம்பித்தது தான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 38 - அவர் உங்களை விசாரிக்கிறவர், பீனிக்ஸ், 60-0301

இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் செய்த மிகவும் கீழ்த்தரமான என்னவென்றால் அவர்கள் சிகரெட்டு புகைக்க ஆரம்பித்தது தான்.

அது தான் உள்ளுக்குள்ளே விரோதிகள் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்ற காரியமானது இந்த தேசத்தில் உள்ளதென்றால், பெண்கள் புகைப்பிடித்தல் என்பது அந்த விரோத காரியத்தில் பெரிதான ஒன்றாகும்.

அது நல்லொழுக்கங்களை உடைத்துப் போடுகின்றது, அது-அது-அது இங்கிருக் கின்ற இந்த மனநல காப்பகங்களை பைத்தியம் பிடித்த மக்களால் நிரப்புகின் றது அது காச நோய், புற்றுநோய் பிடித் திருக்கின்ற மக்களை கொண்டு சென்று மருத்துவமனைகளை நிரப்புகின்றது.

எல்லா காரியமும் இந்த சிகரெட்டி லிருந்து தான் உருவாகின்றது.

ஆனாலும் ஒரு இதமான உணர்வைப் பெறத் தான் சிகரெட்டை அவர்கள் உப யோகின்றனர்.

# ஆனால் மானிட இருதயத் தில் கிறிஸ்து தம்முடைய இடத்தை எடுத்துக் கொள்ளும் வரைக்கும் உங்களால் திருப்தியடையவே முடியாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 30 - ஜீவனுக்கு தாகம் கொள்ளுதல், சிக்காகோ, இல்லினாய், 59-0613

இதை நான் உங்களுக்கு கூறட்டும், தேவனைத் தவிர உங்களை திருப்தி படுத்துகின்ற காரியமானது ஒன்றுமே இல்லை. நீங்கள் விரும்பும் எல்லாவற்றையும் செய்யலாம், நீங்கள் குடித்து வெறிக்கலாம். ஆனால் மானிட இருதயத்தில் கிறிஸ்து தம்முடைய இடத்தை எடுத்துக் கொள்ளும் வரைக்கும் உங்களால் திருப்தியடையவே முடியாது.

# சிந்தையின் போர்

3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து